Nam Dinamathi

நம் தினமதி

18-03-2011

Page # 6

# 19ம் தேதி மகளிருக்காக வேலைவாய்ப்பு முகாம்

சென்னை, மார்ச்.18-

பெண்களுக்கான பிரத்யேக வேலைவாய்ப்பு முகாம் நாளை 19ம் தேதி சென்னை கீழ்பாக்கத்தில் உள்ள லைட் அரங்கில் நடைபெறுகிறது. இந்த முகாமினை அக்சென்சர், சதர்லேண்ட் ஆகியவை இணைந்து தி இந்து நாளிதழ் நடத்துகிறது.

இதுகுறித்து அக்சென்சர் நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவர் பிரித்வி ஷெர்கில் கூறியதாவது:

இன்றைய உலகளாவிய வேலைவாய்ப்புச் சூழலில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்கள் திறமையானவர்களை கண்டு தேர்ந்தெடுக்கிறது. எங்களுடைய அக்சென்சர் நிறுவனத்திலும், இதையே தான் நாங்கள் மேற்கொள்கிறோம் என்றார்.

இம்முகாமில் எச்சிஎல், விப்ரோ, ஃபோர்ட் டெக்னாலஜி சர்வீசஸ் இந்தியா, எல்என்டி இன்போஃபோடெக், ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட், மொபியஸ் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொள்கின்றன.

மேலும் முகாமில் பங்கேற்க விரும்புவோர் www.avtariwin.com/womenjobfair என்ற இணையதளத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும்.